டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

அக்ரி-டாக்டர்
மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 11.8.2024 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 046 - Madurai | Online Edition

### பருவ நிலையைத் தாங்கி, உயர் விளைச்சல் தரக்கூடிய

# உயிரி செறிவூட்டப்பட்ட 109 பயிர் ரகங்களை பிரதமர் வெளியிடுகிறார்

புது தில்லி, ஆக.10

பருவநிலையைத் தாங்கி, உயர் விளைச்சல் தரக்கூடிய உயிரி செறிவூட்டப்பட்ட 109 பயிர் வகைகளை பிரதமர் நரேந்திர மோடி இன்று காலை 11 மணியளவில் புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் வெளியிடுகிறார். இந்த நிகழ்ச்சியின் போது விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளுடன் பிரதமர் கலந்துரையாடுவார்.




34 வயல் பயிர்கள் மற்றும் 27 தோட்டக்கலை பயிர்கள் உட்பட 61 பயிர்களில் 109 ரகங்களை பிரதமர் வெளியிடுவார். வயல் பயிர்களில், சிறுதானியங்கள், தீவனப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், கரும்பு, பருத்தி, நார்ச்சத்து மற்றும் பிற சாத்தியமான பயிர்கள் உள்ளிட்ட பல்வேறு தானியங்களின் விதைகள் வெளியிடப்படும். தோட்டக்கலைப் பயிர்களில், பல்வேறு வகையான பழங்கள், காய்கறி பயிர்கள், தோட்டப் பயிர்கள், கிழங்கு பயிர்கள், மசாலாப் பொருட்கள், பூக்கள் மற்றும் மூலிகைப் பயிர்கள் வெளியிடப்படும்.

நீடித்த வேளாண்மை மற்றும் பருவநிலை மாற்றத்தைத் தாங்கும் வழிமுறைகளைப் பின்பற்றுவதை பிரதமர் எப்போதும் ஊக்குவித்து வருகிறார்.

ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத இந்தியாவை உருவாக்க மதிய உணவு, அங்கன்வாடி போன்ற பல அரசு திட்டங்களுடன் உயிரி செறிவூட்டப்பட்ட பயிர் வகைகளை இணைப்பதன் மூலம் அவற்றை ஊக்குவிப்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தை உறுதி செய்வதுடன், அவர்களுக்கு தொழில்முனைவுக்கான புதிய வழிகளை திறக்கும் என்று பிரதமர் கூறுகிறார்.

109 உயர் விளைச்சல் ரகங்களை வெளியிடுவதற்கான இந்த நடவடிக்கை இந்தத் திசையில் மற்றொரு படியாகும்.

## கனரா வங்கி கிராமப்புற சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிலையத்தின் சார்பாக ‘இலவசமாக கோழி வளர்ப்பு (Poultry Rearing) பயிற்சி‘

ஈரோடு, ஆக.10

கனரா வங்கி கிராமப்புற சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிலையத்தின் சார்பாக ‘இலவசமாக கோழி வளர்ப்பு (Poultry Rearing) பயிற்சி‘யானது வருகின்ற 19-8-24 முதல் 30-8-24 வரை 10 நாட்கள் நடைபெற உள்ளது.

பயிற்சியில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆண் / பெண் இருபாலரும் 18 வயதிற்கு மேல் 45 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம்.

வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் அல்லது நூறு நாள் வேலைத் திட்டத்தில் இருப்பவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இப்பயிற்சியில் கலந்து கொள்ளலாம்.

பயிற்சி, சீருடை, உணவு உட்பட அனைத்தும் இலவசம் மற்றும் பயிற்சியின் முடிவில் அரசு சான்றிதழ் வழங்கப்படும். முன்பதிவு அவசியம்.முன்பதிவு செய்வதற்கான எண்கள் 87783 23213, 72006 50604, 0424-2400338 ஆகும்.

பயிற்சியானது, கனரா வங்கி கிராமப்புற சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம், ஆஸ்ரம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகம் 2-ம் தளம், கொல்லம்பாளையம் பைபாஸ் ரோடு , ஈரோடு – 638 002 என்ற முகவரியில் நடைபெறும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தரமான முட்டை உற்பத்தி குறித்த பயிற்சி

புதுக்கோட்டை, ஆக.10

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டார அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் கீழக்குறிச்சி கிராமத்தில் 9.8.24 அன்று வேளாண்மை உதவி இயக்குநர் எஸ் ராஜசேகரன் வழிகாட்டுதலின்படி தரமான முட்டை உற்பத்தி என்ற தலைப்பில் பயிற்சியானது நடைபெற்றது.

இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டு பேசிய கீழக்குறிச்சி கால்நடை துறை மருத்துவர் பிரியா, உயர் ரக கோழி முட்டைகள் உற்பத்தி என்பது ஆரோக்கியமான கோழிகளை வளர்ப்பது மட்டுமல்லாமல் தரமான முட்டை உற்பத்தி பெருக்குவது ஒரு அறிவியல் ஆகும். சரியான இனங்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், உகந்த ஊட்டச்சத்து வழங்குவதன் மூலம், சுத்தமான மற்றும் வசதியான குடில்களை பராமரித்தல் மூலமும் உயர்தர முட்டைகளின் நிலையான விநியோகம் செய்யலாம்.

மேலும் முட்டையிடும் கோழிகளுக்கு தயாரிக்கப்பட்ட வணிக ரீதியான கோழி தீவனங்கள் கால்சியம், புரதம் மற்றும் வைட்டமின் உட்பட முட்டை உற்பத்திக்கு தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் இருப்பதாகவும் முட்டை கோழி வளர்க்கும் பொழுது 50 கோழிக்கு ஒரு தண்ணீர் தொட்டி, ஒரு தீவனத் தொட்டி வைத்தால் போதும் என்றும் முட்டையிடும் பருவத்தில் கோழிகள் ஒவ்வொன்றும் சுமார் 110 கிராம் தீவனம் காலையிலும் மாலையிலும் சமமாக பிரித்து அளிக்க வேண்டும் என்றும் கூறினார். மேலும் அடுக்குக் கோழி வளர்ப்பு என்பது முட்டையிடும் கோழி பறவைகள் ஆகும். அடுக்கு கோழிகள் ஒரு சிறப்பு கோழி இனமாகும். அவை ஒரு நாள் வயதாக இருக்கும் போதே வளர்க்க வேண்டும் அவை வணிக ரீதியாக 18 முதல் 19 வாரங்களுக்கு இடையில் முட்டையிட தொடங்குகின்றன. அவைகள் 72 முதல் 78 வாரங்கள் வரை தொடர்ந்து முட்டை இடும். மேலும் அடுக்கு கோழிகள் முட்டையின் தன்மை மற்றும் நிறத்தை பொருத்து இரண்டு வகைப்படும். வெள்ளை முட்டை யிடும் கோழிகள், பழுப்பு நிறம் முட்டையிடும் கோழிகள் என்ற விவரங்களையும், குடற்புழு நீக்கம் செய்தல் முக்கியத்துவத்தைப் பற்றியும், கோழிகளுக்கு போடப்படும் தடுப்பூசிகளின் பற்றியும் விவசாயிகளிடம் கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அதனைத் தொடர்ந்து பேசிய சபரிஸ்வரன் வேளாண்மை உதவி அலுவலர் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையினால் செயல்பட்டுக் கொண்டிருக்க கூடிய ஒழுங்குமுறை விற்பனை கூடம் செயல்பாடுகள் பற்றியும் கடன் வழங்குதல் பற்றியும் மின்னணு மூலம் விற்பனை செய்யும் வழிமுறைகள் பற்றியும் உழவர் சந்தையின் நடைமுறைகள் பற்றியும் நடப்பாண்டு செயல்படுத்தக்கூடிய திட்டங்கள் மானியங்கள் குறித்து எடுத்துக் கூறினார்.

முன்னதாக ரவிராஜன் வட்டார தொழில்நுட்ப மேலாளர், வரவேற்று வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியம் விவரங்களையும், தற்பொழுது கிடங்கில் இருப்பில் உள்ள விதை இருப்பு பற்றியும் விதைகளை விதை நேர்த்தி செய்து விதைப்பது பயிர்களில் நோய் உண்டாக்கும் பூஞ்சானா வித்துக்களை அழிகின்றது. இதனால் பயிர்களில் உண்டாகும் நோய்களை கட்டுப்படுத்தலாம் என்று விவசாயிகளிடம் எடுத்துக் கூறினார். சக்திவேல் உதவி தொழில்நுட்ப மேலாளர் நன்றி கூறினார்.

இந்த பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சக்திவேல், நவாப் ராஜா மற்றும் மகாலட்சுமி உதவி வேளாண்மை அலுவலர் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.



# கியூமிக் அமிலத்தின் பயன்பாடு - ஓர் பார்வை

**கியூமிக் அமிலத்தினால் பயிருக்கு விளையும் நன்மைகள்**

● நல்ல மண் கட்டமைப்பு மற்றும் பொல பொலப்புடன் இருக்கும்.

● நல்ல ஊடுருவும் தன்மை மற்றும் காற்றோட்டம்.

● நீரினை நிலை நிறுத்தும் தன்மை மற்றும் குறைந்த மண் அரிமானம்.

● விளைபொருளின் உற்பத்தி திறனும் தாமும் மேலோங்கி யிருக்கும்.

● விதை முளைப்புத் திறன் அதிகமாகிறது. வறட்சியை தாங்கி வளரும்.




● வேர் வளர்ச்சி நன்றாக இருக்கும். எனவே சத்துக்களை கிரகிப்பதும் அதிகரித்து பயிர் ஆரோக்கியம் கூடும்.

● வேர்களின் சுவாசம் நன்றாக இருக்கும்.

● மகசூல், விளைபொருளின் தோற்றமும், ஊட்டச்சத்து அளவும் அதிகரிக்கும்.

**பயன்படுத்தும் விதம்**

● இது குருணை வடிவிலும், திரவ வடிவிலும் சந்தைகளில் கிடைக்கிறது.

● பரிந்துரை 1-2 சதவிகிதம் இலைவழித் தெளிப்பு.

● குருணை 30 கிலோ / எக்டர் சொட்டுநீர் பாசனம் மூலம் அளிக்கலாம் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தெரிவித்தார்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 10.08.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 36 | 57 | உருளை (கோலார்) | 36 | 42 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 58 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 66 |
| 2 | வெண்டை | 25 | 30 | 58 | மேரக்காய் | 18 | 22 |
| 3 | தக்காளி (நாடு) | 12 | 16 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 34 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 12 | 16 | 60 | கேரட் | 90 | 96 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 50 | 54 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 54 | 58 |
| 6 | புடலை | 40 | 45 | 62 | நூல்கோல் | 50 | 60 |
| 7 | பீர்க்கன் | 25 | 32 | 63 | டர்னிப் | 36 | 42 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 35 | 40 |
| 9 | பாகற்காய் | 44 | 48 | 65 | மு.கோஸ்(கலர்) | 40 | 45 |
| 10 | கொத்தவரை | 25 | 30 | 66 | காளிபிளவர் | 44 | 50 |
| 11 | பூசணி | 30 | 36 | 67 | பட்டாணி | | |
| 12 | அரசாணி | 22 | 26 | 68 | பூண்டு | 190 | 275 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 50 | 55 | 69 | இஞ்சி | 60 | 128 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 80 | 85 | 70 | புருக்கோலின் | 210 | 220 |
| 15 | சி.வெங்காயம் | 36 | 40 | 71 | பென்னி பீன்ஸ் | 44 | 48 |
| 16 | பெ.வெங்காயம் | 34 | 38 | 72 | குடமிளகாய் | 48 | 58 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 35 | 73 | ஊட்டி அவரை | | |
| 18 | பச்சை மொச்சை | 50 | 55 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 40 | 44 | 71A | | | |
| 20 | தேங்காய் | 30 | 34 | | | | |
| 21 | மாங்காய் | 0 | 0 | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 46 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 65 | 68 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 70 | 78 | 75 | எலுமிச்சை | 90 | 100 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா | 45 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 34 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 110 | 120 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 40 | 45 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 25 | 30 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 35 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 30 | 32 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 75 | 80 |
| 40 | கோவக்காய் | 40 | 46 | 91 | பூவன் | 45 | 52 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 48 | 52 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 30 | 35 | 95 | நாடன் | 40 | 45 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 58 | 62 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 30 | 34 | 97 | செவ்வாழை | 80 | 87 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 0 | 0 | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 68 | 72 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | புளி | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 40 | 45 | 104 | நாவல் | 0 | 0 |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 28 | | | | |

# விதை சான்றளிப்பு விதை நேர்த்தி பயன்கள் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றி பயிற்சி

திருச்சி, ஆக.10

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டாரம், முள்ளால் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விதை சான்றளிப்பு விதைநேர்த்தி பயன்கள் மற்றும் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய விவசாய பயிற்சி நடைபெற்றது.

இதில் லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சுகுமார் பேசுகையில் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், விவசாயி களுக்கு மானிய விலையில் ஜிப்சம், சிங்சல்பேட், தக்கை பூண்டு, உயிர் உரங்கள் போன்றவற்றை பெற்றுக் கொள்ள விவசாயிகளுக்கு விரிவாக விளக்கிக் கூறினார்.

விதை சான்றளிப்பு மற்றும் அங்கக சான்றளிப்புத்துறை வேல் முருகன், விதை சான்று அலுவலர் பேசுகையில் உயிர் உர விதைநேர்த்தி, உயிர் உரங்கள் பயன்படுத்துதல், சான்று அட்டை பொருத்திய விதைகள் பயன்படுத்துதல், நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். விஸ்வநாதன், உதவி வேளாண்மை அலுவலர் பேசுகையில் விவசாயிகளுக்கு வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானிய திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார்.

அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் அட்மா திட்டத்தில் கண்டுணர்வு சுற்றுலா விவசாயிகள் பயிற்சி செயல் விளக்கங்கள் பற்றி விரிவாக விளக்க கூறினார். உதவி தொழில் மேலாளர் கார்த்திக், பேசுகையில் உழவன் செயலி, பாரதப் பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி திட்டத்தில் அனைவரும் தங்களது சுய விபரத்தை பதிவு செய்து தொடர்ந்து தவணை பெற கூறினார். பயிற்சியில் முள்ளால் கிராமத்தைச் சேர்ந்த பல முன்னாடி விவசாயிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் மண்வளம் மேம்படுத்துதல் குறித்த விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, ஆக.10

ஈரோடு மாவட்டம், தூக்கநாயக்கன் பாளையம் வட்டாரம், வேளாண்மை - உழவர் நலத்துறை-2024-25-யுவுஆயு திட்டத்தின் மூலம் - மண்வள மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி பெருமுகை கிராமத்தில் நடைபெற்றது. இதில் தூக்க நாயக்கன்பாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இரா.கார்த்திகேயன், தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

இப்பயிற்சியில் ஈரோடு நடமாடும் மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ஜமுனா கலந்து கொண்டு மண் பரிசோதனை, நீர் பரிசோதனை செய்வது குறித்தும், அதற்கேற்ப நுண்ணுயிர்கள், உரங்கள், நுண்ணூட்ட சத்துகள் இடுவதன் முக்கியத்துவத்தை பற்றியும், மண்வளம் திட்டம் பற்றியும் தெளிவாகவும், விளக்கமாகவும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

பின்னர் குமரகுரு வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் ஹேமலதா கலந்து கொண்டு மண் வளத்தை மேம்படுத்துதல், நுண்ணூட்ட சத்துகளை பரிசோதனை செய்வது, நுண்ணூட்ட சத்து மேலாண்மை, பயிர்களுக்கு ஏற்ப அடியுரங்கள் இடுவது குறித்து விவசாயிகளுக்கு தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறினார்.

மேலும் தொடர்ந்து மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ஆனந்தி கலந்து கொண்டு இத்திட்டத்தின் நோக்கம், இதில் விவசாயிகளுக்கு கிடைக்கும் மானிய திட்ட விபரங்கள் குறித்தும், உழவன் செயலி, வேளாண்மை-உழவர் நலத் துறையின் மானிய திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

பயிற்சியில் நடமாடும் மண் பரிசோதனை நிலைய வாகனம் கலந்து கொள்ளப்பட்டு விவசாயிகளுக்கு உடனடியாக மண், நீர் பரிசோதனை செய்து வழங்குவது குறித்து உதவி வேளாண்மை அலுவலர் சுலோச்சனா செயல்விளக்கம் காண்பித்தார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ஸ்ரீநாத், அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஞானசேகரன், மணிகண்டன் ஆகியோர் செய்திருந்தனர். இதில் பெருமுகை, கள்ளிப்பட்டி பகுதியை சார்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# பூச்சி தாக்குதலால் முருங்கை வரத்து குறைந்தது



ஈரோடு, ஆக.10

ஈரோடு மாவட்டம், அரவக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில், 30 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் முருங்கை பயிரிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், முருங்கை மரங்களை சுற்றி பூச்சிகள் தாக்குதல் காரணமாக பூக்கள் மற்றும் இலைகள் உதிர்ந்து முருங்கை விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் மொத்த விற்பனை சந்தைக்கு முருங்கை வரத்தும் குறைந்துள்ளது.

சந்தைக்கு வரும் முருங்கை காய்களும் பழுத்து, பழுப்பு நிறத்தில் இருப்பதால் முருங்கைக்கு உரிய விலை கிடைப்பதில்லை. தற்போது முருங்கை கிலோ, ரூ.40 முதல் விற்பனையாகிறது. சில்லறை விற்பனையில் ஒரு முருங்கைக்காய், ஐந்து ரூபாய்க்கு விற்பனையாகிறது. முருங்கை வரத்து குறைந்து உள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

# நீலகிரி பசுந்தேயிலைக்கு ரூ.16.85 விலை நிர்ணயம்

ஊட்டி, ஆக.10

குன்னூர் தேயிலை ஏல மையம் மற்றும் 'இன்கோ சர்வ்' மையத்தில் வாரந்தோறும் தேயிலை தூள் ஏலம் விடப்படுகிறது. தேயிலைதூளுக்கு கிடைக்கும் விலையின் அடிப்படையில், மாதந்தோறும் பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யப் படுகிறது.

இதன்படி, நீலகிரியில் சிறு தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் தேயிலை தூளின், ஜூலை மாத ஏலத்தின் அடிப் படையில், பசுந்தேயிலைக்கான விலையை குன்னூரில் உள்ள இந்திய தேயிலை வாரியம் நிர்ணயம் செய்கிறது.

இதன் அடிப்படையில், 'ஜூலை மாதத்திற்கான பசுந்தேயிலை, கிலோ, 16.85 ரூபாய்,' என விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விதை விதைக்கும் கருவி மானியத்தில் எப்படி பெறுவது?



தமிழக அரசின் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் குறுவை சாகுபடி செய்யும் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு, விதை மற்றும் உரமிடும் கருவி மானியத்தில் வழங்கிட உத்தரவு பிறப்பித்து உள்ளது.

**இந்த கருவின் சிறப்பு அம்சம் என்ன?**

இந்த கருவியானது விதை மற்றும் உரமிடும் கருவியை கொண்டு நெல், மக்காசோளம், கம்பு, வரகு போன்ற தானியங்களை நேரடி விதைப்பாக விதைக்கவும், நிலக்கடலை, ஆமணக்கு, உளுந்து போன்ற பயிர்களை மானாவாரியாக விதைக்க எளிதாக உதவுகிறது. இதனை ஆங்கிலத்தில் (DOUBLE BARREL SEEDER) என்று அழைக்கப்படுகின்றன.




இக்கருவியின் மூலமாக பயிர் விதைப்பு அரை அடி முதல் 3 அடி இடைவெளியிலும் வரிசைக்கு வரிசை குறைந்து அரை அடி முதல் நமக்கு தேவைக்கேற்ப இடைவெளியில் விதைக்க கூடியது என்பது மற்றொரு சிறப்பு அம்சமாகும்.

இக்கருவியைக் கொண்டு வயல்களில் நிலங்களில் புழுதி விதைப்பு மேற்கொள்ளுவதன் மூலமாக அதற்கான செலவை கணிசமாக குறைக்க முடியும். மானாவாரி விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். இது கையால் இயக்க கூடியது. இதனால் பெட்ரோல், செலவு இல்லை. ஒரு நாளில் 2 ஏ க்கர் வரை விதைப்பு செய்யலாம். விதை போடும் கருவிகள் பல வகைகள் உள்ளன. இதில் இது சிறிய வகையான கருவி. இதிலேயே பெரிய வகையான கருவிகளும் உள்ளன. இதனுடைய விலை 7500 மானியத்தில் 3500க்கு வழங்கபடுகின்றன. இது குறிப்பாக டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுமே மானியத்தில் வழங்கப் படுகின்றன.

**யாருக்கு எவ்வளவு மானியம் கிடைக்கும் தெரியுமா?**

சிறு/குறு பெண் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயி களுக்கு 50% மானியத்தில் அதிகபட்சமாக 10000 மானியம் வழங்கப்படும். இதர விவசாயிகளுக்கு 40% மானியத்தில் அதிக பட்சமாக 8000 வழங்கப்படும்.

தற்போதைய கூலி ஆட்கள் பற்றாக்குறையாக காலத்திலே விவசாயம் செய்ய இனிமேல் இயந்திரங்களின் உதவியால் தான் செய்ய வேண்டிய சூழ்நிலை. அதற்கேற்ப நாமும் மாறுவோம், இயந்திரங்களை நாடுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# கரும்பு சக்கையில் தொழு உரம் தயாரிக்கலாம்

கரும்பு சக்கை என்பது கரும்பில் சாறு எடுத்த பின்பு ஒரு வகையான தக்கை போல் இருக்கும், அதுவே கரும்பு சக்கை யாகும். இது கரும்பாலை மற்றும் வெள்ளம் உற்பத்தி செய்யும் ஆலை களில் ஏராளமாக கிடைக்கும். இது பொதுவாக காகிதம், செய்தித்தாள், அட்டை, ஒட்டும் பசை, துகள் பலகை, மரச் சாமான்கள் மற்றும் பிளாஸ்டிக் அச்சிடுவதற்க்கு பயன்படுகிறது.

சர்க்கரை ஆலைகளில் எரிபெருளாகவும் இதை பயன்படுத்து கின்றனர். மேலும் இதிலிருந்து மின்சாரம் தயாரிக்கவும் பயன் படுத்தலாம். இந்தியாவில் 2023ன் படி 4.91 மில்லியன் எக்டர் கரும்பு சாகுபடி செய்யபடுகிறது. அதில் சராசரியாக 130 டன்கள் 1 எக்டருக்கு மகசூல் கிடைக்கின்றது. கரும்பு இந்தியாவில் மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம், கர்நாடகா மற்றும் தமிழ் நாட்டிலும் அதிகளவு பயிரிடப்படுகிறது.

இந்தியாவில் 1 வருடத்திற்க்கு 75-90 மில்லியன் டன்கள் கரும்பு சக்கை ஆலைகளில் இருந்து நமக்கு கிடைக்கின்றது. இந்தியாவில் 642க்கும் மேற்பட்ட சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அதில் 30 மில்லியன் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யபடுகிறது. 50 மில்லியன் விவசாயிகள் கரும்பை ஒரு பிரதானப் பயிராக சாகுபடி செய்கின்றனர். இவ்வாறு கிடைக்கும் கரும்பு சக்கைகளை நாம் தொழு உரம் தயாரிக்கலாம்.

**தேவையான பெருட்கள்**

கரும்பு சக்கை – 500 கிலோ, கரும்பாலை கழிவு – 500 கிலோ, ராக் பாஸ்பேட் – 25 கிலோ, ஜிப்சம் – 12.5 கிலோ, யூரியா – 12.5 கிலோ, புளுரோட்டஸ் காளான் – 1 கிலோ

**கரும்பு சக்கையில் உள்ள சத்துக்களின் அளவு**

56.11 சதவீதம் ஈரப்பதம், 33.91 சதவீதம் கார்பன், 0.51 சதவீதம் ஹட்ரஜன், 28.55 சதவீதம் கரிமசத்து, 0.9 சதவீதம் நைட்ரஜன், 0.04 சதவீதம் பாஸ்பரஸ், 0.03 சதவீதம் பொட்டாஷ் என்ற அளவில் இருக்கின்றன.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

## தொழு உரம் தயாரிக்கும் முறைகள்

● 8 அடி X 5 அடி உள்ள குழி எடுக்கவேண்டும்.

● குழியில் 100 கிலோ கரும்பு சக்கைகளை பரப்பிவிட வேண்டும்.



● இதன்மேல் 200 கிராம் புளுரோட்டஸ் காளானை பரப்பி தண்ணீர் தெளிக்க வேண்டும்.

● இதன் மேல் 100 கிலோ கரும்பாலை கழிவுகளை பரப்ப வேண்டும்.

● இதன் மேல் ராக்பாஸ்பேட், யூரியா, ஜிப்சம் ஆகியவற்றை 2:1:1 என்ற விகிதத்தில் கலந்து அந்த கலவையில் 10 கிலோ வினை எடுத்து சமமாக தூவ வேண்டும்.

● மேலும் 10 அடுக்குகள் வரும் வரை மாற்றி மாற்றி அடுக்கி வைக்க வேண்டும்.

● அதன்பிறகு மண்ணை கொண்டு நன்கு மூடி வைக்க வேண்டும்.

● 7 நாட்களுக்கு ஒருமுறை இதன் மேல் தண்ணீர் தெளித்து வைக்க வேண்டும்.

● 3 மாதங்களுக்கு பிறகு நன்கு கிளறிவிட வேண்டும்.

● இவ்வாறு மாத முடிவில் மக்கிய தொழு உரம் நமக்கு கிடைக்கும் அவ்வாறு கிடைப்பதை பயிர்களுக்கு பயன்படுத்த லாம்.

● இவ்வாறு பயன்படுத்தினால் இரசாயண உரப்பயன்பாட்டை தவிர்ப்பதுடன் மண்ணின் வளத்தை பேணி பாதுகாக்கலாம்.

தகவல் : **முனைவர். சி. தெய்வசிகாமணி, உதவிப் பேராசிரியர் (உழவியல் துறை), கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி, ஸ்ரீரெங்கபுரம் - 625 532, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# சின்ன வெங்காயத்திற்கு விலை இல்லை பட்டறைகளில் சேமிக்கும் விவசாயிகள்



திண்டுக்கல், ஆக.10

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பகுதியில் சின்ன வெங்காயம் அறுவடை தீவிரமடைந்துள்ள நிலையில் போதிய விலை கிடைக்காததால் பட்டறைகளில் சேமித்து வருகின்றனர்.

ஒட்டன்சத்திரம், புலியூர் நத்தம், முத்துநாயக்கன்பட்டி, கல்லுப்பட்டி, இடையகோட்டை அம்பிளிக்கை காவேரி அம்மாபட்டி சுற்றிய பகுதிகளில் வைகாசியில் சின்ன வெங்காயம் நடவு செய்யப்பட்டது.

60 நாட்கள் பின் தற்போது விளைச்சல் அடைந்துள்ள நிலையில் அறுவடை பணி நடந்து வருகிறது. இதன் காரணமாக மார்க்கெட்டிற்கு சின்ன வெங்காயம் வரத்து அதிகரித்துள்ள நிலையில் கிலோ ரூ.20 முதல் 35 வரை விற்பனையாகிறது. உரங்கள் விலை, நடவு, அறுவடை கூலி உயர்ந்துள்ளதால் இந்த விலை கட்டுபடியாகவில்லை.இதனால் அறுவடை செய்யப் படும் வெங்காயத்தை மூங்கில் பட்டறைகளில் சேமித்து நல்ல விலை கிடைக்கும் போது விற்கும் நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

புலியூர் நத்தம் விவசாயி ராஜேந்திரன் கூறியதாவது : சின்ன வெங்காயம் நடவு கூலியாக ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.500, அறுவடைக்கு ரூ.350 கொடுக்க வேண்டியுள்ளது. இத்துடன் உரம், பூச்சி மருந்து ஆகியவற்றின் விலை உயர்வு காரணமாக வெங்காயம் விலை கட்டுபடியாக வில்லை. இதனால் பட்டறைகளில் சேமித்து வருகிறோம் என்றார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# உளுந்து மற்றும் பச்சைப்பயறில் வேரழுகல் நோய் கட்டுப்பாடு

**வேரழுகல் நோய்**

இந்நோய் மேக்ரோபோமினா பேசியோலினா, ரைசாக் டோனியா பெட்டாட்டிகோலா என்ற பூஞ்சாணங்களால் ஏற்படுகிறது.

**நோய் பரவ சாதகமான தட்பவெப்ப நிலைகள்**

● பகல் நேரங்களில் அதிக வெப்பநிலை ($30^0$செ) மற்றும் நீண்ட நாட்கள் வறண்ட காலநிலையைத் தொடர்ந்து பாசன நீர் அல்லது மழை பொழியும் போது தாக்குதல் அதிகரிக்கும்.

**அறிகுறிகள்**

● பாதிக்கப்பட்ட செடியின் இலைகள் முதலில் மஞ்சளாகி வாடித் தொங்கிக் கொண்டிருக்கும். பிறகு இவ்விலைகள் காய்ந்து உதிர்ந்து விடும்.

● பாதிக்கப்பட்ட பயிர்கள் குறுகியக் காலத்தில் (ஒரு வாரம்) இறந்து விடும். தண்டின் அடிப்பாகத்தில், ஆழ்ந்த பழுப்பு நிறக் கோடுகள் தென்படும். தண்டின் பட்டைகள் அழுகி உரிந்து தொங்கிக் கொண்டிருக்கும்.

● பாதிக்கப்பட்ட செடிகளை எளிதாகப் பிடுங்கி விடலாம். அழுகிய வேர்பகுதிகள் மண்ணிற்க்குள்ளேயே தங்கிவிடும்.

● பாதிக்கப்பட்ட தண்டு மற்றும் வேர்களின் மேல் கருமை நிறப் பூஞ்சாண இழை முடிச்சுகள் (ஸ்கிளிரோசியா) காணப்படும்.

**நோய்க்காரணி மற்றும் பரவும் விதம்**

● முதல் நிலை நோய்ப் பரவல் மண் மற்றும் விதைகளில் தங்கியிருக்கும், இழை முடிச்சுகளின் (ஸ்கிளிரோசியா) மூலம் பரவும்.

● இரண்டாம் நிலை நோய்ப் பரவல் காற்றின் மூலம் நடை பெறும். பூஞ்சாண வித்துகள் (பிக்னிடியோஸ்போர்ஸ்) மூலம் பரவும்.

**மேலாண்மை முறைகள்**

● ஒரு எக்டருக்கு 12.5 கிலோ மக்கியத் தொழு உரம் இட வேண்டும்.

● விதைகளை டிரைகோடெர்மா விரிடி (4.0 கிராம் / கிலோ) அல்லது பேசிலஸ் சப்டிலிஸ் (10 கிராம் / கிலோ) கொண்டு விதை நேர்த்திச் செய்ய வேண்டும் அல்லது பூஞ்சாணக்கொல்லிகளான

கார்பன்டசிம் (2 கிராம் /கிலோ) அல்லது திரம் (4.0 கிராம் / கிலோ) மூலம் விதை நேர்த்திச் செய்யலாம்.

● அடியுரமாகத் துத்தநாகச் சல்பேட் (25 கிலோ /எக்டர்) மற்றும் வேப்பம் புண்ணாக்கு (150 கிலோ / எக்டர்) இடவேண்டும். நடவு செய்த 30ம் நாள் டிரைகோடெர்மா விரிடி அல்லது பேசிலஸ் சப்டிலிஸ் (2.5 கிலோ /எக்டர்) உடன் 25 கிலோ மக்கிய தொழு உரம் அல்லது மணல் கலந்து இட்டு நீர்ப் பாய்ச்ச வேண்டும்.

● தேவைப்பட்டால் பாதிக்கப்பட்ட இடங்களில் கார்பன்டாசிம் (1.0 கிராம் / லிட்டர்) மருந்தை வேர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக்கொண்டுள்ளார்.

# நாமக்கல் வட்டார விவசாயிகளுக்கு துவரை சாகுபடிக்கு மானியம்



நாமக்கல், ஆக.10

நாமக்கல் வட்டாரத்தில் துவரை சாகுபடி செய்யும் விவசாயி களுக்கு 50 சதவீதம் மானியத்தில் விதை, உரங்கள் வழங்கப் படும் என்று வேளாண்மை உதவி இயக்குர் ப.சித்ரா தெரிவித்துள்ளார்.

நாமக்கல் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் மூலம் துவரை சாகுபடி பரப்பை அதிகப்படுத்தும் நோக்கில், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் விதை, உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாடு காரணிகள் உள்ளிட்ட இடுபொருள்கள் வழங்கப்பட உள்ளன. அது சமயம், நாமக்கல் வட்டார விவசாயிகள் தங்களது நிலக்கடலை பயிரில் துவரை பயிரை ஊடுபயிராக பயிரிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஆர்வமுள்ள விவசாயிகள் நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டோ அல்லது அந்த அந்த பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டோ துவரை சாகுபடிக்கு பதிவு செய்திட வேண்டும் என நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்அந்த செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# அனுமதி பெறாமல் கலப்பு உரங்களை விற்றால் உர விற்பனை உரிமம் இரத்து

புதுக்கோட்டை, ஆக. 10

புதுக்கோட்டை மாவட்டத்தில் பயிர் சாகுபடிக்கு தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம். ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது ஆழ்துளை கிணறு, கிணறு ஆகியவற்றில் உள்ள நீர் இருப்பினை பயன்படுத்தி குறுவை நெல், மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, கரும்பு, தென்னை, காய்கறிகள், மா, வாழை மற்றும் மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. மேலும் மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ளவும் விவசாயிகள் தயாராகி வருகின்றனர். எனவே, பயிர் சாகுபடிக்கு தேவையான இரசாயன உரங்களான யூரியா 5224 மெட்ரிக் டன்கள், டிஏபி 940 ெ மட்ரிக் டன்கள், பொட்டாஷ் 809 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 4955 மெட்ரிக் டன்கள், சூப்பர் 815 மெட்ரிக் டன்கள் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.




**உர உரிமம் பெற்ற மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை யாளர்கள் கவனத்திற்கு**

- மானிய உரங்களை பிற மாவட்டங்களுக்கு அனுப்புவதோ, பிற மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்யவோ கூடாது.

- உர விற்பனை உரிமத்தில் அனுமதி பெற்ற நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து, அனுமதி பெற்ற இடங்களில் மட்டுமே இருப்பு வைத்து விற்பனை செய்திட வேண்டும்.

- உரிமத்தில் அனுமதி பெறாமல் கலப்பு உரங்களை இருப்பு வைத்து விற்பனை செய்தல் கூடாது.

- உர மூட்டையின்மேல் அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்யக்கூடாது.

- விற்பனை நிலையத்தில் உர இருப்பு மற்றும் விலை விபர பலகையினை விவசாயிகளின் பார்வையில் படும்படி வைத்து தினசரி பராமரிக்கப்பட வேண்டும்.

- உரங்களை விற்பனை முனையக் கருவி மூலம் மட்டும் விற்பனை செய்திட வேண்டும்.

● விவசாயிகளுக்கு தேவையற்ற இடுபொருட்களை இணைத்து விற்பனை செய்யக்கூடாது.

● தரமற்ற மற்றும் போலியான உரங்களை விற்பனை செய்தல் கூடாது.

மேலும் விவசாயிகளுக்கு தரமான உரங்கள் விநியோகம் செய்யப் படுகிறதா என உர ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது, உரங்களை, அதிக விலைக்கு விற்பனை செய்தல், விவசாயம் அல்லாத தேவைகளுக்கு மானிய உரங்களை விற்பனை செய்தல், உரம் கடத்தல், பதுக்கல் ஆகிய செயல்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் அத்தியாவாசிய பண்டங்கள் சட்டம் – 1955 உரக்கட்டுபாட்டு ஆணை – 1985 மற்றும் உர நகர்வு கட்டுப்பாட்டு ஆணை 1973 ஆகியவற்றின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மீறினால் உர உரிமம் இரத்து செய்யப்படும் எனவும் எச்சரிக்கப்படுகிறது என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம்.ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

# பட்டுக்கூடு அங்காடியில் ரூ.2.39 லட்சத்துக்கு ஏலம்

தர்மபுரி, ஆக.10

தர்மபுரி, அரசு பட்டுக்கூடு அங்காடியில் நடக்கும் தினசரி ஏலத்தில், நேற்று முன்தினம் விவசாயிகளின் வருகை குறைந்து காணப்பட்டது. கடந்த வாரத்தில், 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். பின் விவசாயிகள் வருகை குறைந்து, வியாழக் கிழமை, 24 பேரும் நேற்று முன்தினம், 6 பேரும் ஏலத்துக்கு வந்திருந்தனர்.

இவர்கள், 18 குவியல்களாக, 563 கிலோ வெண்பட்டுக் கூடுகளை கொண்டு வந்தனர். இது, ரூ.263 முதல் 486 வரை சராசரியாக, ரூ.425க்கு ஏலம் போனது. இவற்றின் மொத்த மதிப்பு, 2.39 லட்சம் ரூபாய். நேற்று ஒருநாள் நடந்த இந்த ஏலத்தால் அரசுக்கு, 3,592 ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. அதேபோல் ராசிபுரத்தில், கூட்டுறவு பட்டுக்கூடு விற்பனை நிலையம் உள்ளது. தினசரி இங்கு பட்டு விற்பனை நடந்து வருகிறது. நாமக்கல், கரூர், ஈரோடு மாவட்டங்களில் இருந்து பட்டு விவசாயிகள் ராசிபுரத்திற்கு வந்து பட்டுக்கூடுகளை விற்பனை செய்து வருகின்றனர். நேற்று முன்தினம் 75.150 கிலோ விற்பனை யானது. இதில் அதிகபட்சமாக கிலோ, ரூ.470, குறைந்தபட்சமாக, ரூ.345, சராசரியாக, ரூ.417க்கு விற்பனையானது. மொத்தம், 75.150 கிலோ பட்டுக்கூடு, ரூ.31,000க்கு விற்பனையானது.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சொர்னவாரி நெல் சாகுபடி - ஓர் கண்ணோட்டம்

நேற்றைய தொடர்ச்சி...

### உர மேலாண்மை

இயற்கை உரமான முழுவதும் மக்கிய தொழு உரம் ஐந்து டன் ஏக்கருக்கு அல்லது பசுந்தாள் வரும் 6.5 டன் எக்டருக்கு மடக்கிவிட வேண்டும். நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் பாஸ்போ பாக்டீரியா ஒவ்வொன்றும் 10 பாக்கெட் என்ற அளவில் 25 கிலோ மக்கிய பண்ணை உரம் 25 கிலோ பெரு மணல் நன்கு கலந்து நடுவதற்கு முன் சீராக தூவி விட வேண்டும் அல்லது 20 பாக்கெட் அசோஸ்பாஸ் பயன்படுத்தலாம். சூடோமோனஸ் பிளாரசன்ஸ் 2.5 கிலோ நடுவதற்கு முன் கலந்ததிடலாம்.

வேதி உரங்களை இடும்பொழுது மண் பரிசோதனை மூலம் தேவையான உரங்களை கணக்கில் இடவேண்டும் அல்லது பொது வான உர மேலாண்மையை மூலம் ஒரு ஏக்கருக்கு 60:20:20 கிலோ என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து இட வேண்டும். தழைச்சத்து சாம்பல் சத்து இரண்டையும் நான்கு பாகங் களாகவும் முறையே கடைசி உழவு, தூர் கட்டுதல் நடவு நட்ட (20 முதல் 25 நாட்கள்) கதிர் உருவாகும் பருவம் கதிர் வெளிவரும் நடவு நட்ட 50 முதல் 55 நாட்கள் பருவங்களில் இடம் வேண்டும். தழை சத்து இடும்பொழுது வேப்பம் புண்ணாக்கு அல்லது வேப்பங் கொட்டை நன்கு நசுக்கி பொடியாக்கி யூரியாவுடன் 2:1 அளவில் கலந்து ஓர் இரவு பொழுது வைத்திருக்க வேண்டும். யூரியா வேப்பம் புண்ணாக்கு ஜிப்சம் 5:4:1 என்ற விதத்தில் கலந்து தழை சத்து துடன் பயன்படுத்தும் பயன்படுத்தி திறனை பயன்படுத்துவதன் மூலம் யூரியாவின் திறனை அதிகரிக்கிறது.

### இலைவழி உரம் அளித்தல்

நெல்லுக்கு கதிர் உருவான தருணத்தில் மீண்டும் 10 நாட்கள் கழித்து இருமுறை இலைவழியாக உரமாக யூரியா ஒரு சதவீதம் டிஏபி 2 சதவீதம் நீரோட்டாக போட்டால் ஒரு சதவீதம் என்ற மூன்றின் ஒட்டுமொத்த கரைசலை தெளிப்பதால் நீளமான கதிர்கள் அனைத்து எண்ணிக்கை எடை உடைய மேல்முடியில் கிடைக்க வாய்ப்புள்ளது இளம் பயிரில் துத்தநாக பற்றாக்குறை தென்பட்டால் துத்தநாக சல்பேட் 0.5% உடன் ஒரு சதவீதம் யூரியா கலந்த கரைசலை இலைகளில் 15 நாட்களுக்கு இடைவெளியில் இரு முறை தெளித்து இயக்குறைப்பாட்டை கட்டுப்படுத்தலாம்.

## நீர் மேலாண்மை



கோடையில் வெப்பம் காரணமாக அதிக அளவில் நீர் ஆவியாவதால் தண்ணீர் தேவை அதிகரிக்கிறது நடவு செய்யும் பொழுது நடவு தண்ணீரின் அளவு சேரும் சகதிகமாக இருக்குமாறு வைத்துக் கொண்டு சரியான ஆழத்தில் நடவு செய்ய வேண்டும் .நட்ட ஒரு வாரத்திற்கு ஒரு அங்குலம் நீரை தேக்கி வைக்க வேண்டும் இக்கால பயிர் பச்சை பிடிக்கும் காரமானதால் இந்த நீர் அளவு குறையாமல் நீர் பராமரிக்க வேண்டும்.

நீரின் ஆழம் பயிரின் வளர்ச்சிக்கு ஏற்ப படிப்படியாக ஒரு அங்குலம் வரை அதிகரிக்கப்படலாம் 2.5 சென்டிமீட்டர் ஆழத்திற்கு நீர்க்கட்டி கட்டிய நீர் மறைந்து மண்ணில் வெடிப்பு தோன்றும் போது மீண்டும் நீர் கட்டுதல் நலம் இவ்வாறு செய்வதால் வேர்ப்பகுதியில் அதிக காற்றோட்டம் ஏற்பட்டு வேரின் வளர்ச்சி அதிகரிக்கிறது மேலும் அதிக தூற்கள் வெடிக்கும் தன்மையுடன் கூடுதலாக கதிர் உள்ள தூண்கள் அதிக நீளமான கதிர்கள் எடை கிடைக்கிறது விளைச்சல் அதிகரிக்கிறது. நெல் வளர்ச்சி பருவத்திற்கு ஏற்ற நீர் பாசனம் தேவை. தூர்கட்டுதல் தருணத்தில் நீர் மறைய நீர் கட்டுதல் அதிக தூர்கள் வெடிக்கும் நடவு நட்ட பருவத்தில் அதிக காய விடுவதால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படுத்தும். அறுவடைக்கு 15 நாட்களுக்கு முன் நீரின் வடித்துவிட வேண்டும் உலர் நிலங்களில் காய்ச்சலும் பாய்ச்சலும் முறையினை பின்பற்றும்போது வயிலின் அதிகம் காய்ந்து விடாமல் நீர் பாசனம் செய்யும் விடுவதால் வயலின் நன்மை அதிகரிக்கும் பயிரின் வளர்ச்சி பாதுகாக்க வாய்ப்புள்ளது.

## பூச்சி மற்றும் நோய் மேலாண்மை

பொதுவாக கோடை நீர் பயிரில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைவு நாற்றங்காலில் பனி அதிகமாக இருக்கும் நிலையில் குலை நோய் தென்பட வயலில் வாய்ப்புள்ளது. அதனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 200 கிராம் கார்பன்டசிம் மருந்தை தெளித்து கட்டுப் படுத்தலாம். அதிகம் வெப்பம் இருக்கும் நிலையில் நாற்றங்காலில் இலைபேன் தாக்கும் தென்பட வாய்ப்புள்ளது.

இதனை கட்டுப்படுத்த ஆசாரி பேக்கரின் 400 மில்லி தெளித்து கட்டுப்படுத்தவும் நடவு வழியில் தண்டு துளைப்பான் தென்பட வாய்ப்புள்ளது. இதன் தாக்கம் ஒரு சதுர மீட்டருக்கு இரண்டு முட்டை குவியல்கள் அல்லது 10% நடுக்குறித்து காய்தல் தென்பட்டவுடன் ஏக்கருக்கு 400 மில்லி கார்போ பிரான் அல்லது கார்ட் ஆப் ஹைட்ரோ குளோரைடு 400 எம்எல் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

சொர்னவாரியின் நெல் பயிரில் வரைபின் ஆடுதுறை மூன்று உளுந்து பயிரினை பயிரிடுவதால் கூடுதல் லாபம் பெறவும் வாய்ப்பு உள்ளது. எனவே மேல் கூறிய

தொழில்நுட்பங்களை சரியான முறையில் கையாளுவது மூலம் சொர்னவாரி நெல்லின் அதிக விளைச்சல் பெறலாம்.

தகவல் : **முனைவர் ஆ.ப.சீனிவாசபெருமாள், முனைவர் சு.மா.சுரேஷ்குமார் (உழவியல் துறை), முனைவர் சே.சுதாஷா (தாவர நோயியல் துறை), முனைவர் சி.பானுமதி, முனைவர் பா. யோக மீனாட்சி (பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் துறை) முனைவர் ஆ.புனிதா (தோட்டக்கலைத் துறை) நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர்,** திருவள்ளுவர் மாவட்டம் - 602 025.

**முற்றும்.**

# மக்காசோளம் சாகுபடி சிறப்பு திட்டத்தில் செயல்விளக்கத்திடல்

மதுரை, ஆக.10

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மக்காசோளம் சாகுபடி சிறப்பு திட்டத்தில் விவசாயிகளுக்கு மக்காசோளம் செயல்விளக்கத்திடல் அமைப்பதற்கு விதை, உயிர் உரம் மற்றும் இதர இடுபொருள்கள் மானியத்தில் வழங்கப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு மக்காசோளம் விதை (இரகம் 9455) 10கிலோ, உயிர் உரம் 1லிட்டர், நானோ யூரியா 500 மில்லி, அங்கக உரம் 12.5 கிலோ அடங்கிய ரூ.6000/- மதிப்பிலான இடுபொருட்கள் செயல்விளக்கத் திடல் அமைக்க மானியத்தில் வழங்கப்படுகிறது. தே.கல்லுப்பட்டி வட்டாரத்திற்கு 760 ஹெக்டேர் பரப்பளவிற்கு செயல்விளக்கம் அமைக்க இலக்கு பெறப்பட்டுள்ளது. தற்பொழுது விதை மற்றும் உயிர் உரங்கள் வழங்கப்படுகிறது. மேலும் பயிரின் வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரிக்க விரிவாக்க மையங்களில் நுண்ணூட்ட உரக்கலவை இருப்பில் உள்ளது. ஒரு ஹெக்டேருக்கு 12.5 கிலோ நுண்ணூட்ட உரத்தை மணலுடன் கலந்து விதைத்த பின் இட வேண்டும். இதை வாங்கி பயன்பெற தே.கல்லுப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மா.விமலா கேட்டுக் கொள்கிறார்.தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் மற்றும் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டங்களில் செயல்விளக்கம் அமைப்பதற்கு குதிரை வாலி, சோளம், கம்பு, உளுந்து, துவரை விதை மற்றும் இதர இடு பொருள்கள் 50% மற்றும் 100% மானியத்தில் விநியோகிக் கப்படுகிறது. விவசாயிகள் வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.